සභාපති
தலைவர்
Chairman (+94) 011 2556840

ලේකම්
செயலாளர்
Secretary (+94) 011 2556831

කාර්යාලය
காரியாலயம்
Office (+94) 0112556833
0112556834

ෆැක්ස්
தொ.நகல
Fax (+94) 011 2556836
011 2556837

විද්‍යුත් තැපැල
மின்னஞ்சல்
e-mail fincom@sltnet.lk

මුදල් කොමිෂන් සභාව
( ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 'ර' ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)
நிதி ஆணைக்குழு
(அரசியலமைப்பின் 154`ஏ ஆம்உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டது)
FINANCE COMMISSION
(Established under Article 154 R of the Constitution)

48, වජිර පාර,
කොළඹ 04, ශ්‍රී ලංකා.
48, வஜிரா வீதி,
கொழும்பு-04, இலங்கை.
48, Vajira Road,
Colombo 04, Sri Lanka.

මගේ අංකය
எனது இல
My No FC/3/3/2015

ඔබේ අංකය
உமது இல
Your No

දිනය
திகதி
Date 2015.12.30

**தமிழாக்கம**

**நிதி ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம்: 2016/01**

பிரதம செயலாளர்
மேல் /மத்திய /தென் /வட /கிழக்கு / வடமேல் / வட மத்திய /ஊவா / சப்பிரகமுவ மாகாணம்

## மூலதன நிதியின் கீழ் வருடாந்த அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பது தொடர்பான நடைமுறைகள்

இந்த சுற்றறிக்கை 2016 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் நடைமுறையில் இருக்கும். அதற்கு அமைவாக, நிதி ஆணைக்குழுவால் இதற்கு முன்னர் இவ் விடயம் தொடர்பாக 2015.03.25 திகதியன்று வழங்கப் பட்ட 2015/1 என்னும் இலக்கம் கொண்ட சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப் படுகிறது.

இந்தச் சுற்றறிக்கையில் மூலதன நிதி என்பதன் பொருள், பாராளுமன்றத்தால் அனுமதிக்கப் பட்ட வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படும் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை, காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கொடை, மாகாணங்களில் நடைமுறைப் படுத்தப்படும் வேறு தேசிய மற்றும் வெளிநாட்டு திட்ட நிதிகள் மற்றும் மாகாணங்களால் சொந்தமாகப் பெறப்படும் வருமானத்தில் மூலதன பகிர்வுகளாகக் கருதப் படும் சகல நிதிகளும் உள்ளடங்கும். இந்த நிதிகளைப் பயன்படுத்தி மாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தும் போது கீழே காட்டப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

### 1. நிர்மாண நடவடிக்கைகள்

#### 1.1. கட்டிடங்கள் :

1.1.1. கட்டிடங்கள் நிர்மாணிக்கப் படும்போது, அவை மாகாண தேவைகளுக்கு பொருத்தமுடையதாகவும் மற்றும் அது தொடர்பான செலவு மதிப்பீடுகள் நம்பகத்தன்மை உள்ளதாகவும் தயாரிக்கப் படுவதற்கு மாகாண செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பொறுப்பு எடுத்துக் கொள்ளவேண்டும்.

1.1.2. தொடர்பான நிறுவனத்தின் சொந்தம்-மற்றும் உரிமை தெளிவாக உள்ள இடங்களில் மாத்திரம் கட்டிடம் நிர்மாணிக்கப்பட வேண்டும்.

1.1.3. தேசிய மட்டத்தில் அரச நிறுவனங்களால் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்படும்போது, தற்போது ஏற்றுக் கொண்டு அனுமதிக்கப்பட்ட கட்டிட மாதிரித் திட்டங்கள் (Type Plans) மாகாணங்களால் பின்பற்றப் பட வேண்டும்.

1.1.4. 2016 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப் படுத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ள பூஜ்ய-அடிப்படை வரவு செலவுத் திட்ட அணுகுமுறை ZBBA பின்பற்றும் ஒழுங்கில், சகல நிர்மாண நடவடிக்கைகளும் குறிப்பிட்ட அந்த வருடத்தில் திட்டமிடப் பட்ட இலக்குக்கு அமைவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஏதாவது நிர்மாண வேலைகள் அந்த ஆண்டு நிறைவு அடைவதற்குள் பூர்த்தி செய்து முடிப்பதற்கு சிரமம் என்றால், இவ் விடயம் கட்டங்களாக்கப் பட்டு புதிய திட்டமாக, அடுத்த ஆண்டுக்காக தயாரிக்கப் படும் அபிவிருத்தித் திட்டங்களுக்குள் உள்ளடக்கப்படல் வேண்டும். எதிர்பார்க்கப் படும் முழு நிர்மாணம் தொடர்பாக மதிப்பிடப்பட்ட முழு செலவுக்கும் நிதி ஆணைக்குழுவின் சம்மதம் பெறப்படல் வேண்டும். சகல கட்டங்களும், இக் கட்டம் பூர்த்தியானவுடன் தாமதமில்லாமல் பயனாளிகன் பாவனைக்கு இணைத்துக் கொள்ளத் தக்கதாக திட்டமிடப் படல் வேண்டும்.

1.1.5. பொது மக்களுக்கு சேவைகள் வழங்குவதை எளிதாக்கல் மற்றும் விளைதிறனுள்ளதாக்கல் தொடர்பாக கட்டிடங்கள் திட்டமிடப்படுவதுடன், விசேட தேவைகளோடு மக்களுக்காக பொருத்தமான வசதிகளும் திட்டமிடப்படல் வேண்டும்.

1.1.6. தற்போது மாகாண நிறுவனங்களுக்குச் சொந்தமான, பயன் படுத்தப்படாத கட்டடிங்கள் தொடர்பாக மதிப்பீடுகள் மேற் கொள்ளப்பட்டு, அடையாளம் காணப்பட்ட அவ்வாறான கட்டிடங்கள் வேறு பொருத்தமான நிறுவனங்களின் பாவனைக்காக முறையாகக் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.1.7. கட்டிடம் திட்டமிடுவதற்கு சமாந்திரமாக, அந்தக் கட்டிடத்தைப் பயன் படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பான மதிப்பீடுகள் மேற் கொள்ளப்பட்டு, அவற்றுக்கான செலவுகள் மற்றும் அவற்றால் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

1.1.8. அலுவலகக் கட்டிடங்களில் மின்சார வெளிச்சம் மற்றும் குளிரூட்டிகள் ஆகியவற்றின் பாவனையைக் குறைக்கும் வகையில், அக் கட்டிடத்தை அமைக்கும்போது இயற்கையான காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் கிடைக்கத் தக்கதாக திட்டமிடப்பட வேண்டும்.

1.1.9. கட்டிடம், விளையாட்டு மைதானம் மற்றும் ஏனைய பொது இடங்களைச் சுற்றி பாதுகாப்புச் சுவர்கள் மற்றும் சுற்றுமதில்கள் அமைப்பதில் முடியுமான அளவு செலவுகளைக் குறைக்க வேண்டும்.

1.1.10. கராஜ், விறாந்தை மற்றும் ஏனைய அத்தியாவசிய பகுதிகள் உள்ளடங்கலாக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக அமைக்கப்படும் உத்தியோகபூர்வ வதிவிடம் 1,750 கன அடிக்கு மேற்படாமலும் , ஏனைய உத்தியோகத்தர்களுக்காக அமைக்கப்படும் உத்தியோகபூர்வ வதிவிடம் 1,200 கன அடிக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். கிடைக்கத் தக்கதாக உள்ள இடத்தை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்காக, கட்டிடங்கள் இரண்டு மாடிகள் கொண்டதாக திட்டமிடுதல் மிகவும் சிறந்ததாகும்.

## 1.2 வீதிகள் :

மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகார சபை வீதிகளை அமைக்கும் போதும் அவற்றை மேம்படுத்தும் போதும் அதிக காலம் பயன்படுத்தக் கூடிய வகையில் கார்பட் இடுதல், தார் போடுதல் அல்லது கொங்கிரீட் இடுதல் தவிர்ந்த கிறவல் போடுதல் அல்லது தற்காலிக பாதை அமைத்தல் ஆகியவற்றைச் செய்யாதிருக்க வேண்டும். இங்கே, வீதிகள் நிலையாக

நீடித்த காலம் பயன் படுத்த தேவையான மதகுகள், பாலம், பக்கக் கான்கள் ஆகியவற்றை அமைப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். கிராமத்து உற்பத்திகளை சந்தைகளுக்குக் கொண்டு செல்லுதல், மற்றும் ஏனைய சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, நகரங்களுக்கு எளிதாக பயணம் செய்வதற்கு வசதியாக மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபை வீதிகள் தேசிய வீதிகள் முறைமையோடு இணைக்கப்பட வேண்டும். அடிக்கடி வீதிகள் சேதமடைவதைக் குறைக்கும் பொருட்டு வீதிகள் அமைக்கும் போதும் மேம்படுத்தும்போதும் அவற்றைப் பேணிப் பராமரிப்பதற்கும் பொருத்தமான முறைகளைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

### 1.3 சிறிய குளங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசனம் :

சிறிய குளங்கள் மற்றும் சிறிய நீர்ப்பாசனங்களை அமைத்தல், அபிவிருத்தி செய்தல், புனரமைத்தல் மற்றும் பேணுதல் தொடர்பாக நிதியை பயன் படுத்தும்போது, தொடர்பான நீர் நிலையிலிருந்து விவசாய நிலம் வரை நீரை வழங்குவதற்குத் தேவையான சகல பகுதிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். இங்கே, விவசாய அமைப்புகளின் ஊக்கமான பங்களிப்பு பெற்றுக்கொள்வதோடு, அத்தகைய பங்களிப்பை செலவு மதிப்பீடுகளிலும் உள்ளடக்க வேண்டும்.

## 2. நிர்மாண ஒப்பந்தங்களை வழங்குதல் :

காலத்துக்குக் காலம் வழங்கப் பட்ட தேசிய பெறுகை வழிகாட்டுதல்கள் மூலம் நடைமுறையிலுள்ள எல்லைகளுக்கு மேற்படாமல் நிர்மாண ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டும். பாரிய அளவிலான நிர்மாணங்கள் திறந்த கேள்விப்பத்திர திட்டமுறைமைக்கு அமைவாக செய்யப்படுவதோடு, குறிக்கப்பட்ட நிதி எல்லையையும் உள்ளடக்கி மாகாண சபை / மாவட்ட செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரர்களுக்கிடையில் விலைக்கூறுகள் பெறப்பட்டு பொருத்தமானவர்களைத் தெரிந்தெடுத்து ஒப்பந்தங்களை வழங்குவதன் மூலம் ஏனைய நிர்மாண வேலைகளை நிறைவேற்ற முடியும். அது போல, நேரடி ஒப்பந்த முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கும்போது, பெறுகைகள் வழிகாட்டுதல் கோவையில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியமாகும்.

## 3. பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் விலைக்குப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பாவனை :

புதிய பொருட்களை விலைக்கு வாங்குவதற்கு முன்பாக தற்போது பாவனையில் உள்ள பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ஆகியவற்றின் தற்போதைய நிலை தொடர்பாக மதிப்பீடு செய்து, தேவைகளின் முன்னுரிமைக் கேற்ப மாத்திரம் புதிதாக பொருட்களை விலைக்கு பெற்றுக் கொள்ள வேண்டும். விலைக்கு வாங்குவதற்கு எதிர்பார்க்கப்படும் பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பாவனை தொடர்பாக அவசியமான அறிவு, பயனுள்ள பாவனை தொடர்பாக அவசியமான ஆளணி மற்றும் அவற்றை நிறுவுவது தொடர்பாக தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட வேண்டும். பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் சந்தர்ப்பத்தில் அவற்றைப் பேணிப் பராமரிப்பது தொடர்பாக பொருத்தமான வேலைஒழுங்கைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். எல்லாப் பொருட்களையும் விலைக்குக் கொள்வனவு செய்யும்போது, அரசால் அனுமதிக்கப்பட்ட பெறுகை நடவடிக்கைக்கு அமைவாக பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

## 4. வாகனங்களை விலைக்குக் கொள்வனவு செய்தல் மற்றும் பாவனை :

வாகனங்களை விலைக்குப் பெற்றுக் கொள்ளும் போது, அது தொடர்பாக பொதுத் திறைசேரியால் காலத்துக்குக் காலம் வழங்கப்பட்ட சுற்றறிக்கைகளில் காட்டப்பட்ட விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். வாகனங்கள் விலைக்குப் பெற்றுக் கொள்ளும்போது,

நிதி ஆணைக்குழுவின் முன் அனுமதியுடன் பொதுத்திறைசேரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படாத வாகனம் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக கையளித்தல் அல்லது அகற்றப்படுவதோடு, அதன் மூலம் பெறப்படும் வருமானம் மாகாண நிதிக்கு வைப்பு செய்யப்பட வேண்டும்.

உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப் பட்ட உத்தியோகத்தருக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வாகன குழாத்திலுள்ள வாகனம் வழங்க முடியாது என்பதுடன், உத்தியோகத்தர்களுக்காக வாகனம் வழங்கப் படுவது தொடர்பாக நிறுவகத் தலைவரின் அதி கூடிய கவனம் மேற்கொள்ளப் படவேண்டும்.

## 5. சுய தொழில்களை ஊக்குவித்தல் :

ஒழுங்கான முறைமைகளுக்கு அமைவாக தெரிந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு சுயதொழிலை ஆரம்பிப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு தொடர்பான சுயதொழிலுக்குப் பொருத்தமான வகையில் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பெற்றுக் கொள்வதற்கு வழங்கக்கூடிய ஏதாவது உதவித் தொகைக் கொடைகளை வழங்க முடியும். அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஒதுக்கீடுகள் தவிர, ஏனைய மூலதன ஒதுக்கீடுகளில் ஒவ்வொருவருக்கும் அல்லது ஒரு குடும்பத்துக்கு தனிப்பட்டதாக உதவித் தொகைளைப் பெற்றுக் கொடுக்கும்போது, உயர்ந்த பட்சம் ரூபா.100,000/- க்கு குறைவாக இருக்க வேண்டும் என்பதோடு, அப்படி பெற்றுக் கொடுக்கும் உதவித் தொகை பெறுமதியில் ஆகக் குறைந்தது 50% பயனாளின் பங்களிப்பில் கழிக்கப் பட வேண்டும்.

சுயதொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பதிவுசெய்யப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகைகளைப் பெற்றுக் கொடுக்கும்போது, உயர்ந்த பட்சம் ரூபா.200,000/- க்கு குறைவாக இருக்க வேண்டும்., அத்தோடு சங்கத்தின் பங்களிப்பு ஆகக்குறைந்தது 50%மாக இருக்க வேண்டும். இப்படியாகப் பெற்றுக் கொடுக்கப் படும் சகல உதவித் தொகைகளும் வருமான தருவிப்பதை நோக்காகக் கொண்டு வழங்கப்படுவதோடு, பாவனையாளர் பொருட்களை விற்பனைக்காக அவற்றைப் பெற்றுக் கொடுக்க கூடாது. இப்படியாக சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக வழங்கப்படும் உதவித் தொகைகள் மூலம் நிறைவேற்றப்படும் விடயங்கள் தொடர்பாக மீளாய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு, அது தொடர்பாக அரை ஆண்டுகான முன்னேற்றத்தை அறிக்கை செய்ய வேண்டும்.

## 6. சூழல் பாதுகாப்பு :

பசுமை அபிவிருத்தி கருத்துருவுக்கு அமைவாக சகல வழிகளிலும் நிர்மாணங்களில் சூழலைப்பாதுகாக்க அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சூழல்பாதுகாப்பு சட்டதிட்டங்கள் தொடர்பான அடிப்படை விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். நிர்மாணிக்கும் சந்தர்ப்பம் மற்றும் அதன் பின்னர் தொடர்பான நிறுவனத்தால் சூழலைப் பாழாக்காதிருக்க பொருத்தமான நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படல் வேண்டும்.

## 7. காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கொடையின் கீழ் மாகாண சபை உறுப்பினர்களால் முன்மொழியப்படும் அபிவிருத்தி திட்டம்

சகல மாகாணசபை உறுப்பினர்களுக்காகவும் ஒதுக்கப்படும் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட கொடை செலவு செய்யும்போது கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அவற்றுக்கு எதிராகக் காட்டப்பட்டுள்ள விகிதத்தைப் பின்பற்ற வேண்டும்.

| | |
|---|---|
| பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் | 30% |
| சமூக உட்கட்டமைப்பு வசதிகள் | 30% |
| சுயதொழில் அபிவிருத்தி | 20% |
| நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் | 10% |
| சமயம்,கலாசார மற்றும் கலை நடவடிகைகைக்கைகள் | 10% |
| **மொத்தம்** | **100%** |

## 7.1 பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் - 30%

### i. கிராமத்து வீதிகள்

- கிராமத்தினுள்ளும் மற்றும் கிராமங்களுக்கு இடையிலும் போக்கு வரத்து வசதிகளை அபிவிருத்தி செய்வதோடு, பொது இடங்கள் ( பாடசாலை, மத ஸ்தலங்கள், சந்தைகள், சுகாதார சிகிச்சை நிலையங்கள், பொதுக்கிணறுகள், மயான பூமி) போன்றவற்றிற்குச் செல்லும் வீதிகளின் அபிவிருத்தி தொடர்பாக முன்னுரிமை வழங்கப்படல வேண்டும்.

- வீதிகளில் பக்க கான்கள், பக்க அணைகள், மதகுகள் மற்றும் சிறிய பாலம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பாக ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டும்.

- பொதுவாக பயன்படுத்தப் பட்டுக்கொண்டிருக்கும் சிறிய வீதிகளுக்கு கொங்கிறீட் இடுதல் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

- இதன் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக தெரிந்தெடுக்கப்படும் வீதிகள், கிராம அபிவிருத்தி வீதிகள், விவசாய வீதிகள், மற்றும் குறைபாடுள்ள சேவைகளைக் கொண்டிருக்கும் கிராமங்கள் தொடர்பாக வழங்கப்படும் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை மற்றும் வேறு நிதிகளைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்யும் வீதிகளோடு இரட்டிப்பாக இல்லாமையை பார்த்துக் கொள்ள வேண்டும்.

### ii. குடி தண்ணீர்

பொருத்தமான நீர் நிலைகளிலிருந்து குடி தண்ணீர் வழங்குதல் இதன் கீழ் நிறைவேற்ற முடியும். நீரின் மாதிரி மற்றும் விபரங்கள் தொடர்பாக நீர்வழங்கல் சபையின் உறுதியைப் பெற்றுக் கொள்வதோடு, அதன் பொருட்டு நிலவர அறிக்கையையும் பெற்றுக் கொள்ள வேண்டும். குடி தண்ணீர் திட்டத்தைத் திட்டமிடுகையில், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்கு பிரஜைகளின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமாகும்.

### iii. மின்சாரம்

இலங்கை மின்சார சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணிக்கையிலான வீடுகள் உள்ள பிரதேசங்களுக்கு பொது மின் இணைப்பு வழங்குவதற்காக இந்த நிதியைப் பயன் படுத்த முடியும்.

## 7.2 சமூக உட்கட்டமைப்பு வசதிகள் - 30%

### i. கல்வி

- வேறு நிதிகளைப் பயன்படுத்தி நடைமுறைப் படுத்தப்படும் திட்டங்களோடு இரட்டிப்பாக இல்லாது அரச பாடசாலைக் கட்டிடங்களை திருத்துதல், பாதுகாப்புச் சுவர் மற்றும் கேற் அமைத்தல், சுகாதார நடவடிக்கைகள் மற்றும் குடி தண்ணீர் வழங்குதல், வியைாட்டு மைதானம், சிறுவர் பூங்கா அமைத்தல் மற்றும் அபிவிருத்தி வேலைகளைச் செய்து கொள்ள் முடியும்.

- பதிவு செய்யப்பட்ட முன் பள்ளிகளுக்காக மேசை, கதிரை மற்றும் ஏனைய தேவையான உபகரணங்கள் வழங்குவதற்காக அதிக பட்ச ஒதுக்கீடாக ரூபா.30,000/-செலவிடலாம். .ஐந்து வருடங்களுக்குள் ஒரே நிறுவனத்துக்கு இத்தகைய உபகரணங்கள் திரும்பவும் வழங்கப்படாதிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- உள்ளூராட்சி நிறுவனம் அல்லது பாடசாலைகளைச் சேர்ந்த நூலகங்களுக்கு நூல்கள் வழங்குவது தொடர்பாக செலவிடக்கூடிய தொகை அதிக பட்சம் ரூபா.25,000/-ஆக இருப்பதுடன், தற்போது போதியளவு எண்ணிக்கையான நூல்கள் இல்லாத பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

- கல்வியில் திறமையுள்ள ஆனால் குடும்ப வருமானம் குறைவாக உள்ளதால் புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் பணம் கொடுத்து வாங்க வசதியற்ற மாணவர்களுக்கு, ஒரு மாணவருக்கு வருடமொன்றுக்கு ரூபா.5,000 /- என்ற உச்ச எல்லையின் கீழ் கற்றல் உபகரணங்கள்( புத்தகங்கள்,பேனா பென்சில், கொம்பஸ் பெட்டி மற்றும் புத்தகங்கள் போன்றவை) வழங்க முடியும். குடும்ப வருமானம் தொடர்பாக கிராம சேவையாளர் மற்றும் மாணவரின் திறமை தொடர்பாக பாடசாலை அதிபரின் பரிந்துரையைப் பெற்றுக் கொள்வதோடு, தொடர்பான வகுப்பாசிரியருக்கூடாக தொடர்பான மாணவருக்கு வழங்கப்பட வேண்டும். அது தொடர்பாக பாடசாலையில் ஏனைய மாணவர்களுக்கு தெரிவிக்காமல் இருப்பதோடு, இந்த நிதியைப் பயன்படுத்தி பொதுவாக மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கக் கூடாது.

### ii. சுகாதாரம் மற்றும் சமூக சேவை

- கிராமிய சுகாதார சிகிச்சை நிலையம் நடாத்தப்படும் கட்டிடங்களைத் திருத்துதல், தண்ணீர் வழங்குதல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை நிறைவேற்ற முடியும்.

- கிராமிய சுகாதார மத்திய நிலையங்களுக்கு தேவையான கதிரை மற்றும் வாங்கு போன்ற உபகரணங்கள் வழங்கப்படுவதோடு, வழங்கப்படும் பொருட்கள் தொடர்பான விபரங்கள் அந்த சுகாதார மத்திய நிலைய பொருட்பதிவேடுகளில் பதியப்பட வேண்டும்.

- வருமானம் குறைந்த குடும்பத்தில் விசேட தேவையுள்ள ஒருவருக்கு, குறிப்பாக பாடசாலை செல்லும் வயதிலான குழந்தைக்கு ரூபா 35,000/- என்ற உச்ச எல்லையின் கீழ் அவர்களின் நாளாந்த வாழ்க்கையை எளிதாக்கும் பொருட்டு விசேடமாக உதவக்கூடிய உபகரணம் ஓரேயொரு தடைவ மட்டும் வழங்கப் படலாம். இந்த உபகரணம் அவர்களுடைய விசேட தேவைக்குப் பொருத்தமானதாக அமைய வேண்டும். இத்தகைய உபகரணம் வழங்கப்படும் போது, அது தொடர்பாக வைத்தியரின் பரிந்துரையுடன் மற்றும் மாகாண சமூக சேவைகள் பணிப்பாளருடைய அனுமதியும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

### iii. வீடமைப்பு

- வீட்டை நிர்மாணிப்பதற்கு அல்லது திருத்துவதற்கு பயனாளியின் குடும்பம் ஒன்றுக்கு ரூபா 40,000/- என்ற உச்ச எல்லைக்கு அமைவாக, நிலத்தின் சொந்தத்தை உறுதி செய்தபின்னர் உதவு தொகை வழங்க முடியும். இங்கே, பயனாளியின் பங்களிப்பு மற்றும் சுய உதவி அடிப்படையையும் பின் பற்றுவதோடு, முன்னேற்றத்தையும் அடிப்படையாக வைத்து உதவு தொகையை படிப்படியாக வழங்க வேண்டும்.

மேலும், இது வீடமைப்பு அமைச்சின் தேசிய வேலைத்திட்டத்தின் இரட்டிப்பாக இல்லாமையையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

- இந்த உதவு தொகைக்கு உரித்துடையவர் பின்வருபவற்றுள் ஏதாவது ஒன்றை திருப்தி செய்யும் குடும்பத்துக்கு மட்டும். இந்த விடயங்களை தொடர்பான கிராம சேவையாளர் உறுதிப்படுத்த வேண்டும்.
  - i வறுமை நிவாரண பயனாளியாக இருத்தல்
  - ii குடும்பத்தில் வருமானம் ஈட்டும் உழைப்பாளி இறந்த காரணத்தால் அசாதாரண நிலைக்கு ஆளாகியுள்ள குடும்பம்.
  - iii வீட்டின் பிரதான குடியிருப்பாளர் பெண்ணாகவும் வருமானம் குறைவாகவும் உள்ள குடும்பம்.

- பாடசாலைக் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் பிள்ளைகள் உள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பத்துக்குரிய வீட்டின் மின்சாரம் பெற்றுக்கொள்வதற்காக பயனாளிக் குடும்பம் ஒன்றுக்கு ரூபா 15,000/- என்ற உச்ச எல்லைக்கு அமைவாக உபகார தொகை வழங்கப் படலாம். வருமானம் தொடர்பாக கிராமசேவையாளரின் சான்றிதழ் பெறப்பட வேண்டும். வீட்டுக்கு மின்சாரம் பெறுவதை எதிர்பார்த்து இத்தொகைக்கான கொடுப்பனவு மின்சாரம் வழங்கும் நிறுவனத்துக்கு செலுத்தப்பட வேண்டும்.

## iv. கிராம அபிவிருத்தி

- இரண்டு வருடத்துக்கும் மேற்பட்ட காலத்துக்கு தொடர்ச்சியாகக் கொண்டு நடாத்தப்படும் பதிவு செய்யப்பட்ட மரணகால சகாய நிதிச்சங்கம் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுக்காக தேவைகளை அடிப்படையாக வைத்து கதிரைகள் மற்றும் இணைக்கக்கூடிய தற்காலிக கொட்டகை போன்றவற்றை இணைக்கக் கூடிய தற்காலிக கூடாரம் ஆகியவற்றுக்காக ரூபா.30,000/- என்ற உச்ச வரம்பின் கீழ் வழங்க முடியும். ஐந்து வருடத்துக்குள் ஒரே சங்கத்துக்கு இது போன்ற உபகரணம் திரும்ப வழங்க முடியாது.

- அத்தகைய உபகரணம் பொது நலன்புரி நடவடிக்கைக்காக பயன் படுத்தப் படுவதோடு, தொடர்பான நிறுவனத்தின் பொருட் பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட வேண்டும்.
- மேற்படி உபகரணம் வழங்கப்படும்போது தொடர்பான பிரதேச செயலாளரின் பரிந்துரை, கிராம உத்தியோகத்தரின் இணைப்பைப் பெற்றுக் கொள்வதோடு, விதிகளில் குறிப்பிடப்பட்ட பொருட்பதிவேட்டில் தொடர்பான பதிவுகள் பேணப்படவேண்டும்..

- பாடசாலை, வைத்திய சிகிச்சை நிலையம், மத்திய மருந்தகம் மற்றும் கிராமிய அபிவிருத்தி மண்டபம் போன்ற பொது நிலையங்களுக்கு ரூபா, 30,000 /-என்ற உச்ச எல்லைக்குக் குறைவாக மின்சாரம் வழங்க முடியும் என்பதோடு, அது போன்ற சந்தர்ப்பங்களில் மின்சாரம் வழங்கும் நிறுவனத்துக்கு பணத்தை அனுப்ப வேண்டும்.

- குடிநீர் தேவைக்காக அல்லது குளிப்பது தொடர்பான பாவனைக்காக பொதுக்கிணறு அமைத்தல் அல்லது திருத்துதல் ஆகியவற்றுக்காக ரூபா, 25,000 /-என்ற உச்ச எல்லைக்குக் குறைவாக ஆதார உதவிகள் வழங்க முடியும். அத்தகைய ஆதார உதவிகள் பதவி செய்யப்பட்ட சங்கங்கள் மூலமாக மாத்திரம் வழங்கப்படலாம். இதன் பொருட்டு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் தொடர்பினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இங்கே பயனாளிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதும் கட்டாயமாகும்.

## v. விளையாட்டு நடவடிக்கைகள்

- மாகாண விளையாட்டுப் பணிப்பாளருடைய மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான மாகாண அமைச்சுச் செயலாளரால் அதிகாரம் அளிக்கப்பட்ட விளையாட்டு உத்தியோகத்தரின் பரிந்துரை மீது பதிவு செய்யப்பட்ட விளையாட்டுச் சங்கத்துக்கு ரூபா, 25,000 /-என்ற உச்ச எல்லைக்குக் குறைவாக, ஐந்து வருடத்துக்கு ஒரு தடவை விளையாட்டுப் பொருட்கள் வழங்க முடியும்

- இதற்கு முன்னர் தொடர்பான விளையாட்டுச் சங்கத்துக்கு வழங்கக் கூடிய விளையாட்டுப் பொருட்கள் மற்றும் கருவிகள் தொடர்பாக மற்றும் அவற்றின் பாவனை தொடர்பாகவும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- மாவட்ட, மாகாண, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் விளையாட்டுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் விளையாட்டு வீரர்கள்- விளையாட்டு வீராங்கனைகளுக்கு அத்தியாவசிய உடைகள், காலணிகள் அல்லது விளையாட்டுப் பொருட்கள் வழங்குவதன் பொருட்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர் ஒருவருக்கு மாவட்ட மட்ட போட்டி தொடர்பாக ரூபா 4,000 /-மும் மாகாண மட்டப் போட்டி தொடர்பாக ரூபா.6,000.00 மும் தேசிய மட்டத்தில் வெற்றி பெறுபவருக்கு, 8,000 /- மும் மற்றும் சர்வ தேச மட்டத்தில் போட்டியிடும் ஒருவருக்கு ரூபா பத்தாயிரமும் ஆதார உதவிகள் வழங்க முடியும்.

## 7.3 சுய தொழில் ஊக்குவிப்பு - 20%

இதன் கீழ் சுயதொழிலை புதிதாக ஆரம்பிப்பதற்கு அல்லது ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட சுயதொழிலை மேலும் விருத்தி செய்ய விரும்பும் ஒருவருக்கு தேவைப்படும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் தொழிற்பயிற்சி நடவடிக்கைகள் தொடர்பாக செய்ய வேண்டிய கொடுப்பனவுகளின் பொருட்டு வழங்க முடியும் இங்கே , கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் எடுக்கப்பட வேண்டும்.

- ஏதாவது திட்டம் தொடர்பாக ஒருவருக்கு ரூபா.75,000/-க்கு தொழில் முயற்சியை மேம்படுத்தும் பொருட்டு தேவையான உபகரணங்கள் பெற்றுக் கொள்வனவு செய்ய முடியுமென்பதோடு, இங்கே 50 % பயனாளிகள் பங்களிப்பாக பெற்றுக் கொள்ள வேண்டும்…இதன் கீழ் நுகர்வுப் பொருட்கள் விநியோகித்தல் எதுவும் இடம் பெறக் கூடாது.

- ஆகவே சகல திட்டங்கள் தொடர்பாகவும் திட்ட அறிக்கை தயாரிக்கப் படுவதோடு, அது தொடர்பான விடயத்துக்குப் பொறுப்பான திணைக்களத் தலைவருடைய மற்றும் மாகாண திட்டமிடல் பகுதியின் பரிந்துரை பெற்றுக்கொள்ள வேண்டும்.

- தொழிற் பயிற்சி நெறி தொடர்பான செலவுகளில் 80% வீதம் அனுசரணைப் படியாக வழங்க முடியும் என்பதோடு, அதன் பொருட்டு உறுப்பினரின் ஒதுக்கீட்டின் கீழ் ஒருவருக்கு வழங்கக் கூடிய உச்ச தொகை ரூபா.20,000 /- ஆகும்.

- தொழிற் பயிற்சி நெறி தொடர்பாக தேவைப்படும் தொகை ரூபா.20,000 /- க்கு அதிகமாகும் சந்தர்ப்பத்தில் மிகுதிப்பணம் பயனாளியால் கொடுக்கப் பட்டுள்ளது என்பதை உறுதிப் படுத்திய பின்னர் உடன்பட்ட தொகையை உத்தேச பயிற்சி நிறுவனத்துக்கு விடுவிக்க வேண்டும்.

- வீட்டுப் பொருட்கள் உற்பத்தி, மின்சார உபகரணங்கள் திருத்தம், வாகன திருத்தம், இணைத்தல், பார வாகனம் மற்றும் இயந்திர உபகரணங்கள் இயக்குதல் மற்றும் வெளிநாட்டு மொழிகள் போன்ற பயிற்சி நெறிகள் தொடர்பாக அனுசரணைப்படி

பெற்றுக் கொள்ளும்போது, அந்தப் பயிற்சி தொடர்பான தேசிய தொழில் தகைமைகள் (NVQ) சட்டகத்துக்கு அமைவானதாக இருக்க வேண்டும்.

- வேறு முறைமைகளால் உள்ளடக்கப்படாத மற்றும் இதற்கு முன்னர் இதுபோன்ற அனுசரணைப்படி பெற்றுக் கொள்ளதாவர் இதன் பொருட்டு தெரிவு செய்யப்படுவதோடு, இத்தகைய படி வழங்குவதில் கீழே காட்டப்பட்டுள்ள தொகுதியினருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
    - i. வயது: 18க்கும் 35க்கும் இடைப்பட்டதாக உள்ள இளைஞர்கள், யுவதிகள்
    - ii. விதவைகள்
    - iii. விசேட தேவைகள் உள்ளவர்கள்
- பயிற்சிக்கான ஆதார உதவிகளைக் பெற்றுக்கொண்ட பயனாளிகள் பயிற்சியின் பின்னர் தொழில் முயற்சி நடவடிக்கைகளை தொடர்ச்சியாகக் கொண்டு செல்வது தொடர்பாக பொருத்தமான திணைக்களத்தலைவர் மற்றும் மாகாண திட்டமிடல் பகுதி ஆகியவற்றால் மீளாய்வு செய்யப்படுவதோடு, அது தொடர்பான முன்னேற்றத்தையும் பிரதம செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

## 7.4 நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம்- 10%

### i. நீர்ப்பாசனம்

- சிறிய நீர்ப்பாசனம், கால்வாய்களின் அணை கட்டி மற்றும் அணைக்கட்டுகள் நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் இதன் கீழ் நிறைவேற்ற முடியும்.
- விவசாய அமைப்பு அல்லது விவசாயக் குழுவினரால் பராமரிக்கப்படும் பொது விவசாயக் கிணறு அமைத்தல் மற்றும் புனரமைத்தல் ஆகியவற்றுக்காக நிதி வழங்க முடியும். இத்தகைய நடவடிக்கைக்காக 50% பயனாளிகளின் பங்களிப்பாகப் பெற்றுக்கொள்வது கட்டாயமாகும். திட்டமொன்றுக்காக பயன்படுத்தக்கூடிய உச்ச தொகை ரூபா. 40,000/- ஆகும்.

### ii. விவசாயம்

- பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புகளுக்கு மட்டும் விவசாயக் கருவிகள் வழங்கப்பட வேண்டும். விவசாய அமைப்புகளுக்கு வழங்கப்படக் கூடிய விவசாயக் கருவிகளின் உச்ச பெறுமதி ரூபா. 50,000/- ஆக இருப்பதுடன், அவை ஐந்து வருடங்களுக்கு ஒரு தடைவ மாத்திரமே வழங்கப்படலாம். இங்கே 50% வீதம் பயனாளிகளின் பங்களிப்பும் பெறப்பட வேண்டியது கட்டாயமாகும்.
- மேலே குறிப்பிடப்பட்ட படி விவசாயக் கருவிகள் வழங்கப்படும்போது மாகாண விவசாயப் பணிப்பாளருடைய பரிந்துரை பெற்றுக்கொள்வதோடு, அவ்வாறாக வழங்கப்படும் கருவிகள் விவசாய அமைப்பின் பொருட் பதிவேடுகளிலும் உள்ளடக்கப்படுவதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- விவசாய அமைப்புக்கு வழங்கப்படும் கருவிகள் பொதுவாக விவசாயிகளால் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதோடு, அவை தனிப்பட்ட ரீதியில் யாருக்கும் வழங்கப்படக்கூடாது. மேலும், இதற்கு முன்னர் தொடர்பான விவசாய அமைப்புக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள் மற்றும் கருவிகள் தொடர்பாகவும், அவற்றின் பாவனை பற்றியும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

## 7.5. சமய, கலாசாரம் மற்றும் கலை நடவடிக்கை- 10%

- சமய நிலையங்களின் கட்டிடங்கள் திருத்த வேலைகள், பாரம்பரிய நடனங்கள் மற்றும் வேறு கலை நடவடிக்கைகளை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் மற்றும் சமய கலாசார மற்றும் கலைநடவடிக்கைகளின் கீழ் வர்த்தமானி மூலம் விளம்பரப்படுத்தி ஊர்வலம் நடாத்துவது தொடர்பாக உபசரணைப்படி பெற்றுக் கொள்ளலாம். இவற்றைத் தெரிவு செய்யும் போது, மாகாண கலாசார உத்தியோகத்தரின் பரிந்துரை பெறப்படல் வேண்டும்.

- தஹம் பாடசாலைகள் தொடர்பாக தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் பொருட்கள் பெற்றுக் கொள்ளும்போது, நேரடியாக தேவைகளை உறுதிப்படுத்திக்கொண்டு கலாசார உத்தியோகத்தரின் இணைப்பின் கீழ் இவை .இடம் பெற வேண்டும்

## 8. நிர்வாகச் செலவுகள்

மூலதனச் செலவுகளின் கீழ் ஒதுக்கப்பட்ட எதுவிதமான பகிர்வுகளும் நிர்வாகச் செலவுகளுக்காக செலவிடக்கூடாது. அதில் சொல்லப்பட்ட செலவு மீண்டுவரும் செலவுகளோடு பொருத்தமானதாக இருக்க வேண்டும் இது தொடர்பாக நிதி ஆணைக்குழுவால் FC/3/3/2014 என்னும் இலக்கமும் 2014.12.31 திகதியும் கொண்ட கடித மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மேலும் வலுவுள்ளதாக உள்ளது

## 9. பொது விடயங்கள்

i. பாண்டங்கள், உபகரணங்கள், கருவிகள் மற்றும் பொருட்கள் வழங்கப்படும்போது தனிப்பட்டவர்களுடைய பெயர், படம் அல்லது குறியீடு ஆகியவை அவற்றில் பொறிக்கக் கூடாது.

ii. பல்வேறு சமய நடவடிக்கைகள் தொடர்பாக தனிப்பட்டவர்களால் பாவிக்கப்படும் விதமாக அல்லது நுகர்வுப்பொருட்கள் இல்லது பாண்டங்கள் வழங்கப்படக் கூடாது

iii. திட்டம் ஆரம்பிப்தற்கு முன்னர் சாத்திய மதிப்பீடு தொடர்பாக கவனத்தில் கொள்வதோடு அது தொடர்பாக தேவையானால் விசேட நிறுவனங்களிலிருந்து அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, மீளாய்வு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

iv. திட்டம் அடையாளம் காணப்படுவதற்கு முன்னர், ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் உரிய விடயங்களின் எல்லைகள் நிச்சயிக்கப்படுவதோடு, ஒரே பயனாளிக்குழுக்கள் தொடர்பாக நிறுவனங்கள் சிலவற்றின் ஒரே விதமான திட்டங்கள் அடையாளம் காணப்படக்கூடாது.

இச் சுற்றறிக்கை தொடர்பாக கௌரவ ஆளுநர், கௌரவ முதலமைச்சர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் சகல மாகாண அமைச்சுச் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்கள/ நிறுவன தலைவர்கள் மற்றும் தொடர்பான ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கவும்.

2016 ஜனவரி 01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வண்ணம் இச் சுற்றறிக்கை வழங்கப் படுகிறது.

(கையொப்பம்) டபிள்யு. எச். முனசிங்க
செயலாளர் நிதி
ஆணைக்குழு

பிரதிகள்

1. ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி செயலகம்-………………… தகவலுக்காக
2. பிரதம மந்திரியின் செயலாளர், பிரதம மந்திரியின் அலுவலகம்-…….. தகவலுக்காக
3. செயலாளர், தேசிய கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு-…………………………………………………………………….தகவலுக்காக
4. செயலாளர், நிதி அமைச்சு-………………………………………….. தகவலுக்காக
5. செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு-…… தகவலுக்காக
6. கணக்காய்வுத் தலைமை அதிபதி, கணக்காய்வுத் திணைக்களம்-…... தகவலுக்காக
7. திறைசேரியின் பிரதிச் செயலாளர், பொதுத் திறைசேரி-……………... தகவலுக்காக
8. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம்-… தகவலுக்காக
9. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்-…………….. தகவலுக்காக
10. பிரதிப் பிரதம செயலாளர் ( திட்டமிடல்)- ……………….அவசிய நடவடிக்கைக்காக
11. பிரதிப் பிரதம செயலாளர் ( நிதி)- ……………………...அவசிய நடவடிக்கைக்காக
12. உதவி கணக்காய்வுத் தலைமை அதிபதி,-…………….. அவசிய நடவடிக்கைக்காக